**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53

(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No.156/2020**

PW-2

| Name | அன்னக்கொடி(PW2) | | |
|---|---|---|---|
| Husband's Name | ராமச்சிந்திரன் | Calling | |
| Village | வேலம்பாளையம் | | |
| Taluk | திருப்பூர் | Age | **42** |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12th **day of March 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present)*

**முதல் விசாரணை:-**

விபத்தில் காலமான கிஷோர் என் மகன் ஆவார். கடந்த 04.01.2020 என் கணவருக்கு சதீஷ்குமார் என்பவர் ஃபோன் செய்து என் மகன் கிஷோருக்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னதாக சொன்னார். என் கணவர் சம்பவ இடம் சென்று என் மகனை சம்பவ இடத்தில் பார்த்துவிட்டு என் மகனை அவிநாசி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு செல்லும்போது என் மகன் வரும் வழியிலேயே காலமாகிவிட்டார். நான் அவிநாசி அரசு மருத்துவமனை சென்று என் மகனைப் பார்த்தேன். என் என் கணவர் விபத்து சம்பந்தமாக சேவூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதற்கு பின்பு காவல்துறையினர் அவிநாசி அரசு மருத்துவமனைக்கு வந்து என் மகனின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்த போது நான் உடன் இருந்தேன் என் மகனின் பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன் போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் :**

விபத்து நடந்த விபரம் பற்றி எனக்கு என் கணவர் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். விபத்தில் காலமான நபர் என் மகன் என்பதால் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd. N.Keerthana)<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |